DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 3/2025

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சீனிராஜ் |
| Father / Husband Name | அரியமுத்து |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **26.08.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டத்தில் பொரிசப்பட்டியில் வசித்து PHD படித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வேதஜார்ஜ் எனது தங்கையின் கணவர் ஆவார். கடந்த 11.01.2024 ம் தேதி மாலை 4.00 மணிக்கு வேத ஜார்ஜ் சென்னையில் இருந்து திண்டிவனம் நோக்கி வரும்போது சென்னை நோக்கி சென்ற லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக படாளம் காவல் நிலையத்தில் இருந்து சிவகங்கை தாலுக் காவல் நிலையத்தில் எங்களுக்கு தகவல் சொன்னார்கள். அன்று இரவு கிளம்பி மறுநாள் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவருக்கு முகம் கருத்து இறந்திருந்தார். சத்தியபாமா ஆய்வாளர் அவர்கள் பிரேதத்தின் மீது நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை எங்கு விசாரித்தார் என்றால் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கு அருகே காலை 11.50 மணிக்கு விசாரித்தார். நான் சொல்வது போல் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் போலிசார் விசாரித்து என்னிடம் கையொப்பம் வாங்கிய எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் விபத்தில் இறந்தவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு காப்பீடு பெற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 3/2025

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஆல்வின்சுதன் சேவியர் |
| Father / Husband Name | பிச்சை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **26.08.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சிவகங்கை மாவட்டத்தில் நாடமங்களத்தில் வசித்து வங்கியில் வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன வேதஜார்ஜ் எனது அண்ணன் ஆவார். கடந்த 11.01.2024 ம் தேதி மாலை 4.00 மணிக்கு வேத ஜார்ஜ் சென்னையில் இருந்து திண்டிவனம் நோக்கி வரும்போது சென்னை நோக்கி சென்ற லாரி எந்த சமிக்கையும் செய்யாமல் திடீரென்று திரும்பி வேதஜார்ஜ் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனது அண்ணி சித்ரா எனக்கு தகவல் சொன்னார். நான் சீனிராஜ் சித்ரா மற்றும் ஊர் காரர்கள் சிலர் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அவரை சவக்கிடங்கில் வைத்திருந்தார்கள். அவருக்கு தலை முகம் மற்றும் நெஞ்சு பகுதியில் அடிப்பட்டிருந்தது. போலிசார் அவர் பிரேதத்தின் மீது நடத்திய பிரேத விசாரணையில் நான் சாட்சியாக இருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. சம்பவம் நடக்கும் போது நான் எங்கள் ஊரில் இருந்தேன். நான் சிவகங்கையில் இருந்து புறப்பட்டு மறுநாள் காலை 9.00 மணி முதல் 10.00 மணிக்குள் செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு வந்தேன். அசா1 மற்றும் அசா2 எனது உறவினர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை அறிக்கையில் 16 வது காலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. இறந்தவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு காப்பீடு பெற்று தர வேண்டி போலிசார் கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு போகவில்லை என்றாலும் என்னை யாரும் விசாரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 3/2025

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஜெனிபர் |
| Father / Husband Name | வேதமுத்து |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **26.08.2025**

**முதல் விசாரணை:**

1. எனது சொந்த ஊர் சிவகங்கை ஆகும். நான் தற்போது மகேந்திரா சிட்டியில் உணவகம் வேலை செய்து வருகிறேன். சாட்சி ஜோதி பிரகாஷ் என்பவரை தெரியும். கடந்த 11.01.2024 ம் தேதி வேத ஜார்ஜ் விபத்து ஏற்பட்டது சம்மந்தமாக படாளம் காவல் நிலையத்தில் வைத்து நான் கையொப்பம் செய்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 11.01.2024 ம்தேதி எனது தம்பி வேதஜார்ஜ் என்பவருக்கு டாராஸ் லாரி மோதி விபத்து ஏற்பட்டு செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததை தகவல் தெரிந்து அவரை பார்த்துவிட்டு அன்று மாலை 6.00 மணிக்கு படாளம் கூட்ரோடு அருகே விபத்து நடந்த இடத்தில் பார்க்க சென்றபோது அங்கு படாளம் காவல் நிலைய ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு தயார் செய்த பார்வை மகசரில் சாட்சி கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 3/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | அலெக்ஸ் |
| Father / Husband Name | குழந்தை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **26.08.2025**

**முதல் விசாரணை:**

1. எனது சொந்த ஊர் சிவகங்கை ஆகும். நான் தற்போது மகேந்திரா சிட்டியில் உணவகம் வைத்துள்ளேன். வழக்கில் இறந்துபோன வேத ஜார்ஜ் என்பவர் எனது மச்சான் ஆவார். கடந்த 11.01.2024 ம்தேதி மாலை 4.00 மணிக்கு மேல் மகேந்திரா சிட்டியில் இருந்து கிளம்பி சென்னையில் இருந்து திண்டிவனம் நோக்கிய சாலையில் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது படாளம் கூட்ரோடு அருகே திண்டிவனத்தில் இருந்து சென்னை நோக்கி வந்த டாராஸ் லாரி திடீரென்று சமிக்கை ஏதும் செய்யாமல் திரும்பி வேதஜார்ஜ் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக படாளம் காவல் நிலையத்தில் இருந்து தகவல் சொன்னார்கள். நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது அவர் இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2. புகாரை யார் எழுதினார் என்றால் என் மனைவி எழுதினார். என் மனைவி போலிசார் சொல்ல எழுதினார். மேற்படி போலிசாரின் பெயர் தெரியாது. புகாரை என் மனைவி எழுதவில்லை என்றாலும் போலிசார் ஏற்கனவே எழுதிவைத்திருந்த தாளில் தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தை நான் நேரடியாக சென்று பார்க்கவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பின்னர் சம்பவயிடத்தை சென்று பார்த்தேன். விபத்து ஏற்படுத்திய டாராஸ் லாரி சென்னை நோக்கி சென்றது. இறந்தவர் வேத ஜார்ஜ் திண்டிவனம் நோக்கி சென்றார். இருசக்கர வாகனத்தை லாரி எங்கு மோதியது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி விவரம் தெரியாமல் யாரோ ஒருவர் சொல்வதை வைத்துக்கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவர் எனது மச்சான் என்பதால் அவருக்கு இழப்பீடு பெற்று தர வேண்டி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும்

நடக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்தவர் அவரது வாகனத்தின் அதிவேகமாக அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து கணரக வாகனம் செல்லும் பாதையில் சென்றதால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. புகாரில் சம்பவயிடத்திற்கு சென்றதாகவும் நீதிமன்ற விசாரணையில் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும் சம்பவம் நடந்த இடத்தை தெளிவாக குறிப்பிடாமல் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.